**தமிழ் வருடாந்திர மாநாடு 49வது அமர்வு**
**மலேசிய மெதடிஸ்ட் திருச்சபை**
**"உலகத்திற்கு உப்பாகவும் ஒளியாகவும் இருந்து தேவ மகிமையை தேடு"**
**மத்தேயு 5:13-16**

## தலைவரின் உரை

நமது கர்த்தரும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் வாழ்த்துக்கள். நமது தவமா 49-ஆவது அமர்வுக்கு உங்கள் யாவரையும் நான் வரவேற்கிறேன். நாம் தொடர்ந்து அவருடைய மகிமையை நாடினால், தேவன் நம் யாவரையும் தொடர்ந்து ஆசீர்வதிப்பார் என நான் தாழ்மையுடன் விசுவாசிக்கிறேன். இந்த ஆண்டு, இன்னும் ஒரு புதிய ஸ்தல சபை பிறக்கவும், நாம் 58 சபைகளாக வளரவும் செய்த தேவனுக்கு நான் நன்றியுள்ளவனாயிருக்கிறேன்.

ஐந்து புதிய வாலிபர்களை முழுநேர ஊழியத்துக்கு அழைத்த அவருக்கு நான் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி கூறுகிறேன், இவர்கள் ஜனவரி 2025ல் ஊழியத்திற்கு முந்தைய பயிற்சிக்காக அனுப்பப்படுவார்கள். மேலும், ஜனவரி 2025ல், நமக்கு நான்கு புதிய மாணவர்கள் முழு நேர இறையியல் கல்விக்கு நுழைவார்கள். இவை யாவும் நம்முடைய ஊக்கமான ஜெபங்களுக்கு தேவன் நமக்கு கிருபையாக அளித்தது என நான் இங்கு சாட்சி கூறுகிறேன். தேவன் ஒருவருக்கே துதியுண்டாவதாக. அல்லேலூயா.

### 1. முன்னோக்கி பார்த்தல்: நமது 50 ஆண்டு பயணத்தின் அடிப்படையில்.

a. அடுத்த ஆண்டு நம்முடைய தமிழ் வருடாந்திர மாநாட்டின் 50வது அமர்வாக இருக்கும். முதலாவது, தேவன் நமக்கு செய்தவைகளுக்காக நாம் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். நாம் குறைவான வளங்களோடு அல்லது வளங்களே இல்லாது துவங்கினோம், ஆனால் தேவன் நம் பக்கத்தில் இருந்ததால் இம்மட்டும் ஜெயித்திருக்கிறோம், இதற்காக நாம் ஸ்தோத்தரிக்கிறோம்.

b. இரண்டாவது, இந்தியர்களை குறிப்பாக தமிழர்களை சுவிசேஷம் சென்றடையும்படியான, கடற்கரையில் ஜெபித்தவர்களின் உள்ளார்ந்த அழுகையின் நோக்கமான, அவருடைய அழைப்பிற்கு நாம் முழு முயற்சியோடு கீழ்ப்படிந்ததால் நாம் ஜெயம்கொண்டோம். இது நமது தேவன் கொடுத்த தரிசனம். இந்த கடமையை நாம் கைவிட முடியாது ஆனால் இந்த தரிசனத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து இதை நாம் தொடர வேண்டும், நம் அனைத்து ஸ்தல சபைகள் மேலும் விழுந்த கட்டளை இது.

c. மூன்றாவது, நம்மேல் விழுந்த தற்போதைய மாற்றங்களை செயலாற்றும் நமது அணுகுமுறைகள் ஏற்றனவா என நாம் ஆராய வேண்டும். உதாரணமாக, நம் வாலிபர்களில் பெரும்பாலானோர் இப்போது தமிழ் வேதாகமத்தை கொண்டிருக்கவில்லை என்பதால், நாம் ஆங்கில மற்றும் மலாய் ஆராதனைகளை சிந்திக்கவேண்டியவர்களாய் இருக்கிறோம். இதன் அடிப்படையில், சீன வருடாந்திர மாநாட்டு சபைகள் இந்த மாற்றத்தை சிறப்பாக தழுவிக்கொண்டனர், இவர்களின் நகர்புற சபைகளில் அநேக சபைகளில் ஆங்கில ஆராதனைகள் நடக்கின்றன.

d. நமது தற்போதைய வழிபாடு மற்றும் ஆராதனை முறை தீவிரமாக ஆராயப்பட வேண்டும். இல்லாவிடில், நாம் மனுஷருடைய கலாச்சாரத்தை மட்டுமே நிறைவேற்றும்படியாக அதில் சிக்கிக்கொண்டவர்களாயிருப்போம் (மத்தேயு 15:9). மேலும், வாலிபர் ஆராதனையின் வாயிலாக, ஆராதனையில் வித்தியாசத்தை எதிர்ப்பார்க்கும் நம் வாலிபர்களின் தேவையை சந்திக்க நாம் நமது அனைத்து ஸ்தல சபைகளிலும் ஆலோசிக்க வேண்டும்.

e. மாற்றம் செய்யப்பட வேண்டும் என்பதற்காக எதையும் மாற்றாமல், இந்த தலைமுறையில் இந்நேரத்தில், தேவன் நம்முடைய நிலையில் நாம் என்ன செய்ய வேண்டும் என விரும்புகிறார் என்று நாடி ஏற்றுக்கொள்ளவும் அதற்கு கீழ்ப்படியவும் பிரயாசப்பட வேண்டும்.

f. நமது அனைத்து ஸ்தல சபை உக்கிராணக்குழுவும் அடுத்த ஆண்டிற்கான தங்கள் திட்டங்களை தொடங்குவதற்கு முன் தற்சமய ஊழியங்களைப்பற்றி ஒரு தீவிர மதிப்பீடு செய்ய வேண்டும்.

g. ஊக்கமாக செய்யப்பட்டால், இந்த உரைக்குப் பின்னால் உள்ள ஆய்வு கேள்வி தொகுப்பு நமது சிந்தனைக்கு ஒரு வழிகாட்டியாகவும், நமது பெலன்களையும் பெலவீனங்களையும் வெளிப்படுத்துவதாகவும் அமைய முடியும்.

## 2. தேவன் நமக்கு கொடுத்த மாநாட்டு கருப்பொருள்.

a. தனிமனிதனாகவோ அல்லது சபைகளாகவோ தேவனுடைய மகிமையைத் தேடுவது என்பது மாற்றப்படக்கூடியதல்ல. நாம் வேறு எதையும் தேட நாடக்கூடாது. நம்மில் அல்லது நம் சபைகளில் அவரை மகிமைப்படுத்தாத காரியங்கள், அது மிகச் சிறிய காரியமாயிருந்தாலும், ஏதாவது உண்டா, என்று நாம் தேவனைக் கேட்க வேண்டும்.

b. பிரிவினைகள், பெருமை, பொறாமை மற்றும் இந்த உலகத்தில் அவரது கருவிகளாக தேவன் நாம் செய்ய வேண்டும் என விரும்புவதை நாம் செய்ய இயலாதிருப்பது, போன்ற இவைகள் தேவனுடைய மகிமைக்கு எதிரிகள். இவைகளை நாம் தெளிவாக அடையாளங்கண்டு நமக்குள்ளிருந்தும் நம்மிலிருந்தும் புறக்கணிக்க வேண்டும்.

c. ஆனால், அவருடைய மகிமை, ராஜ்யம் மற்றும் அவருடைய நீதியை நாம் தேடும்போது, மற்ற அனைத்தும் நமக்கு கூட்டிக்கொடுக்கப்படும். சபை வளர்ச்சி மற்றும் எழுப்புதல் உள்பட. தேவன் அனைத்து ஸ்தல சபைகளையும் வளர்ப்பார் அல்லது வளர்க்க வேண்டும் என்பது ஒரு தவறான கருத்து. பிரிந்திருக்கும் சபையை அல்லது பெருமை கொண்டிருக்கும் சபையை தேவன் ஒருபோதும் வளர்க்கமாட்டார், காரணம் அது பிரிவினையையும் பெருமையையும் மட்டுமே வளர்க்கும். தீவிரமான மற்றும் தாழ்மையான சுயபரிசோதனை தேவை.

d. தேவனில்லாமல் நாம் எதையும் செய்ய முடியாது என்று போதகர்களும் தலைவர்களும் நினைவில் கொள்ள வேண்டும் (யோவான் 15:5). அவரில்லாமல் நாம் கட்டவோ அல்லது வளரவோ முடியாது (சங்கீதம் 127:1). நமது வருடாந்திர மாநாட்டுக்கு நாம் திட்டங்களையும் தொலை நோக்கு தரிசனங்களையும் தீட்டும்போது, நமது சொந்த அறிவார்ந்த திட்டங்களும் உத்திகளும் போதாது. நாம் நம்மை தேவனிடம் தாழ்த்தும்போதும் அவரிடம் என்ன செய்ய வேண்டும் என கேட்கும்போதும்தான், அவர் நம்மை உயர்த்தவும் அவருடைய மகிமைக்கு நம்மை பயன்படுத்தவும் முடியும்.

e. சமுதாயத்திற்கு உப்பாகவும் ஒளியாகவும். ஸ்தல சபை சமுதாயத்திற்கு உப்பாகவும் ஒளியாகவும் இருக்கிறதா என்று சபைகள் தொடர்ந்து கேட்டுக்கொள்ள வேண்டும். தேவனுடைய அன்பில் நாம் அணுகும்போது, நமது நான்கு சுவரில் இருப்பதை அது சபைக்கு வெளியில் கொண்டு செல்ல ஆரம்பிக்கும்.

f. போதகருக்கும் உக்கிராணக்குழுவுக்கும் இந்த அணுகக்கூடிய பாரம் இருக்க வேண்டும், இல்லையெனில் நமது சபை திட்ட அட்டவணைப்படி காரியங்களையும் நிகழ்ச்சிகளையும் செய்கிறவர்களாக மட்டுமே காணப்படுவோம். இந்த காரியங்களை நாம் செய்துவிட்டோம் என்று நம்மை நாம் திருப்திபடுத்திக்கொள்ளலாம் ஆனால் இது தேவனை பிரியப்படுத்தியிருக்காது.

g. உலகத்திற்கு உப்பாகவும் ஒளியாகவும். அநேக சபைகள் தேசத்தின் பல பகுதிகளுக்கும் மேலும் உலகத்திற்கும், தேவைகளின் மத்தியில் உப்பாகவும் ஒளியாகவும் இருப்பதால் நான் மகிழ்ச்சியடைகிறேன். மற்றவர்களின் வேதனைக்கு நாம் மனதுருகுகிறவர்களாக இருக்கும் ஆற்றலை இது காட்டுகிறது.

h. மாற்றத்தை கொண்டுவர நமக்கு தேவனிடமிருந்து வல்லமை உண்டு என்று வேதம் நமக்கு கற்றுக்கொடுக்கிறது, இதனால்தான் ஆதி திருச்சபை வளரவும் புதிய சபைகளை நாட்டவும் முடிந்தது.

### 3. நமது வளர்ச்சிக்குழு இலக்கு {சீஷத்துவம்}.

a. நமது அங்கத்தினர்களின் சீஷத்துவத்தின் உருவாக்குதலுக்கும் வளர்ச்சிக்கும் இது ஒரு முக்கியமான பகுதி. வாராந்திர ஆரதனைகளுக்கு வருவது, சீஷத்துவ பயணத்தில் நமது அங்கத்தினர்கள் வளர்ச்சியடைய போதுமானது என நாம் கருதிவிட முடியாது.

b. இரண்டு ஆண்டுகளுக்கு முன் நம்முடைய வளர்ச்சி திட்ட பாதையில் கொடுக்கப்பட்ட காலநிலவரப்படி, இந்நேரத்தில் அநேக சபைகள் இதனால் பயனடைந்திருப்பதை நாம் கண்டிருக்க வேண்டும்.

c. நம்முடைய பொது புரிந்துக்கொள்ளுதலுக்கு, வளர்ச்சிக்குழு கூட்டத்தின் ‘வடிவமைப்பு’ ஜீவியக் குழு அல்லது வட்டார ஐக்கியம் போன்றதுதான், அதாவது சிறு குழுவான அமைப்பு. அதன் உள்ளடக்கமும் இதைப் போன்றதுதான், சுருக்கமான துதிவேளை, தேவனுடைய வார்த்தையை பற்றி கலந்தாலோசித்து அதில் வளருவது.

d. வளர்ச்சிக்குழுவில் ‘அதிகப்படியானது’ என்றால், 15 அல்லது 20 நிமிடங்களை ஒதுக்கி அதில் மற்றவர்களை விசாரித்து, குறிப்பான ஜெப தேவைகளைக் கேட்டு, ஒருவருக்கொருவர் ஜெபிக்க நேரம் செலவிடுவதாகும். நமது அங்கத்தினர்களின் உணர்ச்சிபூர்வமான தேவைகளை இது சந்திக்கிறது.

e. நமது ஸ்தல சபை வாழ்க்கையில் இதுதான் உண்மையாகவே ‘காலியான இடத்தை நிரப்புகிறது’, இதை நாம் ஞாயிறு ஆராதனை அமைப்பில் செய்ய இயலாது, நமது ஜனங்கள் வந்தபின் வீட்டிற்கு திரும்ப துரிதப்படுவார்கள். வளர்ச்சிக்குழு தலைவர்கள் அங்கத்தினர்களை சந்திக்கவும் வாரம் முழுவதும் அவர்களுடன் தொடர்பில் இருக்கவும் நாம் உற்சாகப்படுத்துகிறோம்.

f. ஆனால், சில சபைகளில் மட்டுமே ஸ்தலத்தில் வெற்றியை கண்டிருக்கிறது, இன்னும் பலர் தங்கள் தற்போதைய அணுகுமுறையை மறு ஆய்வு செய்ய வேண்டும். இம்மட்டும் கிடைக்கப்பெற்ற சில முக்கிய கருத்துக்கள்.
   - ஸ்தல சபை தலைவர்கள் இதில் ஆர்வமாயிருக்கவில்லை.
   - ஸ்தல போதகர் இதன் இலக்கை நோக்கி ஓடவில்லை
   - குழுக்களுக்கு தலைமை தாங்க போதுமான தலைவர்கள் இல்லை
   - ஜீவிய குழு மற்றும் வட்டார ஐக்கிய அமைப்பு ஏற்கனவே அமலில் உள்ளது.
   - ஜீவிய குழு மற்றும் வட்டார ஐக்கியம் ஆகியவற்றிலிருந்து வளர்ச்சிக்குழு எப்படி வித்தியாசப்படுகிறது என்ற புரிதல் இல்லை.

g. திட்டமிடல் பாதையில், போதகர்களும் தலைவர்களும் வளர்ச்சிக்குழுவின் இலக்கை ஸ்தல வளர்ச்சிக்குழு தலைவர்களிடம் உடனடியாக ஒப்படைக்கமுடியும் என நாம் கருதினோம். ஆனால், ஸ்தல நிலை வளர்ச்சிக்குழு தலைவர்களை சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளில் அவர்களுக்கு உதவவும் அதை விளக்குவதும் அவசியம் என இப்பொழுது நான் உணருகிறேன். இது மாகாண ரீதியாகவோ அல்லது சபைகள் இணைந்தோ செய்யலாம்.

h. தற்போதைய ஜீவிய குழு தலைவர்கள், வளர்ச்சிக்குழுவாக செயலாற்ற அதன் முக்கிய கூறுகளை தெளிவாக புரிந்துக்கொண்டால், தங்கள் கூட்டங்களில் என்ன செய்ய வேண்டும் என அவர்களுக்கு தெரியும்.

i. நமது தலைவர்கள் இதை புரிந்துக்கொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் நாம் ஜெபிக்க வேண்டும் காரணம் நமது அங்கத்தினர்கள் ஆழமான ஐக்கியத்திற்கும் தொடர்புக்கும் ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

## 4. சுவிசேஷம் மற்றும் அருட்பணி.

a. நமது அங்கத்தினர்களிடையே சுவிசேஷத்திற்கான ஆர்வத்தை தூண்டவும் புதுபிக்கவும், போதகர்களும் உக்கிராணக்குழு அங்கத்தினர்களும் வழிகளை கண்டறிய வேண்டும். இயேசு இவ்வுலகத்திற்கு வர காரணம் காணமற்போனவர்களை தேடவும் இரட்சிக்கவும். மறுபடியும் பிறந்த விசுவாசிகள் அனைவருக்கும் இது தேவன் கொடுத்த இலக்காகவும் இருக்கிறது.

b. சுவிசேஷம் ஒரு நிகழ்ச்சியல்ல, வருடாந்திர நிகழ்வு அல்ல, மாநாட்டு தேவையல்ல, அது காணமற்போனவர்களுக்கு அன்பு செலுத்தும் ஒரு செயல். நாம் சுவிசேஷத்திற்காக ஜனங்களுக்கு பயிற்சிகொடுக்கலாம், ஆனால் காணமற்போனவர்களுக்காக இருதயம் இல்லாவிடில், அது அர்த்தமற்றது மற்றும் பாரமான ஒரு எதிர்ப்பார்ப்பாகிறது.

c. ஆனால், நமது ஸ்தல சபைகளில் அநேகர், கட்டிலிருப்பவர்களையும் இருளிலிருப்பவர்களையும் விடுதலைக்கும் வெளிச்சத்திற்கும் கொண்டுவர மகிழ்ச்சியாகவும் மனப்பூர்வமாகவும் நாடுகின்றனர். இவர்களைத்தான் போதகர்களும் தலைவர்களும் உற்சாகப்படுத்தவும் ஊக்கமளிக்கவும் வேண்டும்.

d. இவர்கள் உக்கிராணக்குழு பொறுப்பில் இல்லாமலிருக்கலாம் அல்லது கல்வியில் பொருளாதாரத்தில் உயர்ந்தவர்களாக இல்லாமலிருக்கலாம், ஆனால், இவர்கள் நம்மத்தியில் உள்ள ‘விலையேறப்பெற்ற கற்கள்’, பரலோகத்தில் சிறந்தவர்களாக கருதப்படுகிறவர்கள், நம்முடைய பிதாவின் கிரியைகளில் பங்காளிகள் (எசேக்கியேல் 34).
e. எந்த வெளிப்புற ஊழியமும் அல்லது பிரசங்க மையமும் இல்லாத சபைகள் தங்கள் முக்கியத்துவத்தை மறு ஆய்வு செய்ய வேண்டும். சபை உண்டாயிருக்க காரணம் காணமற்போனவர்களை அணுக, சுவிசேஷத்திற்கு கவனம் செலுத்தாவிட்டால் அவர்கள் தங்கள் தேவைகளுக்கும் தங்களுக்கும் மாத்திரம் சேவகம் செய்கிறவர்களாயிருப்பார்கள். இறுதியில், இது தலைமைத்துவத்தில் உட்பூசலுக்கும் அதிகார போராட்டத்துக்கும் இட்டுச்செல்லும்.
f. இன்று, நமது வாசற்படியில் அருட்பணி வாய்ப்பு உள்ளது. நமது சபைகள் இதை ஆக்கிரமித்துக்கொண்டனரா? நமது உக்கிராணக்குழுவும் நமது இளையோரும் அகதிகள் ஊழியத்தில் அல்லது புலம்பெயர்ந்தோர் ஊழியங்களில் நாட்டம்கொண்டிருக்கின்றனரா? இல்லையெனில், நாம் ஏன் என்ற கேள்வியைக் கேட்க வேண்டும்.
g. மாநாட்டு நிலையில், இத்தகைய விதைகளை நமது சிறுபிள்ளைகளிடம் விதைக்ககூடியது சிறுவர்கள் அருட்பணி முகாம் என்று தீர்மானித்தோம். ஆனால், இவர்கள் தங்கள் ஸ்தல சபைகளுக்கு திரும்பிய பின் யார் இவர்களை வளர்க்கப்போகிறவர்கள் என நாம் கண்டறிய வேண்டும். அது அருட்பணி தலைவராகவோ அல்லது அவர்களின் சபை பள்ளி ஆசிரியர்களாகவோ இருக்கலாம் ஆனால் ஒருவர் இதை விழிப்புணர்வுடன் இலக்காக கொண்டிருக்க வேண்டும்.
h. நமது தற்போதைய அருட்பணியாளர்களுடன் மற்றும் மலேசிய அருட்பணி இயக்கத்தின் திட்டப்பணிகளுடன் இணைந்து சபைகள் செயலாற்றலாம்.

## 5. மூப்பர் தலைமைத்துவம்.

a. நமது ஸ்தல சபைகளின் உக்கிராணக்குழு அங்கத்தினர்களை அவர்களின் அர்ப்பணிப்பிற்காகவும் நல் ஊழியத்திற்காகவும் நான் பாராட்டுகிறேன். தங்களை தாழ்த்தி, அவருக்கு செவிகொடுத்து மற்றும் தன்னலம் கருதாமல் அவருக்கு சேவையாற்ற முன்வரும் யாரையும் தேவன் பயன்படுத்த முடியும்.
b. நமது உக்கிராணக்குழு அங்கத்தினர்கள், தேவனுடைய குரலை அறியும் தன்மையைக் கொண்டிருக்கவும் அனைத்து நேரங்களிலும் அவருக்கு கீழ்ப்படியவும் வேண்டும். இதை நாம் செய்ய இயலாவிட்டால், அவரது சார்பாக உக்கிராணக்குழு கூட்டங்களில் அவருடைய சித்தத்தை நாம் அறியமுடியாது, அல்லது அதை நிறைவேற்ற முடியாது.
c. நாம் தலைமைத்துவத்தைப் பற்றியும் தேர்தலைப் பற்றியும் பேசுவதை நான் அநேக வேளைகளில் கவனித்திருக்கிறேன், இது இரண்டாவது ஸ்தல மாநாட்டுக்கு முன்பதாக மட்டுமே நடக்கும். தலைமைத்துவம் வளர காலமெடுக்கும். சபையிலுள்ள போதகர்கள் மற்றும் மூத்த தலைவர்கள் தேவனுடைய குரலை கேட்கும் மற்றும் அவரது சித்தத்தை செய்யும் புதிய தலைவர்களை விழிப்புடன் பேண வேண்டும். அவர்கள் தவறுகள்

செய்வார்கள், ஆனால் அதுதான் குறிப்பு, நமது அன்பான வழிகாட்டுதலினால் அவர்கள் அதிலிருந்து கற்றுக்கொள்ள முடியும்.

d. நமது உக்கிராணக்குழுவும் தங்கள் போதகருக்கு செவிகொடுக்க தயாராக இருக்க வேண்டும். போதகர்கள் குறைபாடற்றவர்கள் கிடையாது, ஆனால் அவர்கள் தேவனால் அவரது மேய்ப்பர்களாக ஆவிக்குரிய கண்ணோட்டம் கொடுக்கும்படியாக சபைக்கு கொண்டுவரப்பட்டவர்கள்.

e. நமது மெதடிஸ்ட் முறைமை போதகர் மற்றும் மூப்பர்களுக்கிடையே நல்ல பங்காளித்துவத்தை அனுமதிக்கிறது. போதகரும் உக்கிராணக்குழுவும் ஒன்றிணைந்து செயல்படும்போது, ஸ்தல சபையின் கூடுதலான பெலனாக அது அமைகிறது.

f. நமது உக்கிராணக்குழு அங்கத்தினர்கள் நேரமெடுத்து நம் அங்கத்தினர்கள், குறிப்பாக நமது வாலிபர்கள் கூறுவதை கேட்க வேண்டும். நமது அனைத்து ஸ்தல உக்கிராணக்குழுவும் அவர்களின் கருத்து மற்றும் சாத்தியகூறுகளை மனதுவிட்டு பேசும் ஒரு கலந்துரையாடலை நடத்துமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்களின் குரல் கேட்கப்பட வேண்டும், அதனால் அவர்கள் தங்கள் பங்களிப்பு அங்கீகரிக்கப்படுகிறது என உணருவார்கள். தயவாக இதை 2025 ஆரம்பத்தில் செய்யுங்கள்.

g. வாலிபர் துறை நமது இளைஞர்களின் கோரிக்கைகளை கேட்கும் பொது ஆய்வுடன் வந்திருக்கிறார்கள். இது நல்லது, ஸ்தல சபை அளவில் செய்யப்படும் இந்த ஆய்வு/கருத்து, அவர்களின் உள்ளான கூக்குரலை ஒவ்வொரு உக்கிராணக்குழுவினரும் புரிந்துக்கொள்ள உதவும்.

h. அவர்களை நாம் அசட்டை செய்யும்போது அல்லது அவர்களுக்கு செவிகொடுப்பது முக்கியமில்லை என கருதும்போது, அவர்கள் குரல் எங்கு கேட்கப்படுகிறதோ, தாலந்துகள் பயன்படுத்தப்படுகிறதோ மற்றும் அங்கீகரிக்கப்படுகிறதோ அங்கு அவர்கள் செல்வார்கள்.

i. சமுதாயத்தின் தேவைகளையும் உக்கிராணக்குழு கேட்க வேண்டும். உலகத்திற்கு உப்பாகவும் ஒளியாகவும் இயங்க அழைக்கப்பட்ட அழைப்பானது நம்முடைய ஸ்தல சபை எங்கு நாட்டப்பட்டுள்ளதோ அங்கே நாம் அணுகுவதற்கே. நம்முடைய ஸ்தல சபைகளின் உள்ளேயே நாம் இருக்க முடியாது, நம்முடைய நிகழ்ச்சிகளிலும் நடவடிக்கைகளிலும் திருப்தியடையக்கூடாது. இயேசு அணுகியதுபோல நாமும் அணுக வேண்டும், காரணம் நம்மத்தியில் உள்ள காணமற்போனவர்களுக்குத்தான் இயேசு அதிகமாக தேவை.

## 6. நம்முடைய போதகர்கள்.

a. நம்முடைய தவமா உள்ள நமது போதகர்கள் யாவரும் தேவன் நமது சபைகளுக்கு கொடுத்த பரிசு. போதகர்களாக சேவை செய்ய அவர்களை அழைத்தவர் அவர்தான். தங்கள் ஆரம்பத்தில் அவர்கள் தங்களுடைய ஸ்தல சபைகளினால் வளர்க்கப்பட்டிருந்தாலும், தற்போது அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் சபைகள்தான் அவர்களின் புதிய இல்லம், புதிய குடும்பம் மற்றும் சமுதாயம். ஸ்தல சபையில்தான் அவர்கள் தங்கள் தகுதியை கண்டறிய முடியும் மற்றும் தேவனின் அழைப்பை செயலாற்ற முடியும்.

b. வருடாந்திர மாநாடாக, அனைத்து போதகர்களும் தங்கள் பிரசங்கம் மற்றும் போதனையில் அயராது உழைக்க எதிர்பார்க்கிறோம். வீடுகள் சந்திப்பு மற்றும் தேவையுள்ள அங்கத்தினர்களை கவனிக்கவும் அவர்கள் எதிர்பார்க்கப்படுகிறார்கள். இது அவர்களின் அடிப்படையான அழைப்பு. அவர் சில பகுதிகளில் தடுமாறினால், ஸ்தல சபை உக்கிராணக்குழு மற்றும் போதகர் சபையார் தொடர்பு குழு (PPRC), போதகரோடு பரிவாக பயணிக்க வேண்டும்.

c. தங்கள் சொந்த பெலவீனத்தினால் சில போதகர்கள் ஸ்தல சபையில் போராடினாலும், அவர்கள் மேலும் அவர்கள் குடும்பத்தின் மேலும் ஆவிக்குரிய தாக்குதல் இருப்பதும் நிஜம் என்பதை உணருங்கள். போதகர் மற்றும் அவரது குடும்பத்தை மாறி மாறி தங்கள் அன்றாட ஜெபங்களில் மறைத்துக்கொள்ள ஒவ்வொரு ஸ்தல சபையும் ஜெப வீரர்களை எழுப்ப வேண்டும். போதகருக்காக ஜெபிப்பது கூட பிரசங்க மேடைக்கு அக்கினியை கொண்டுவரும். ஸ்தல சபை மக்கள் தலைவர் ஜெபிக்ககூடிய எழுவர் கொண்ட குழுவை அமைக்கவும் அவர்கள் முறைப்படி தினமும் ஜெபிக்கவும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

d. சில போதகர்கள் சோர்வினால் அழுத்தப்படுகிறார்கள், இவர்கள் ஓய்வெடுக்கவும் புத்துணர்ச்சி பெறவும் வருடத்தில் திட்டமிட்டு விடுப்பு எடுக்க வேண்டும். எந்த போதகரும் தங்களை புதுப்பித்துக்கொள்ளாமலும் கட்டிக்கொள்ளாமலும், தொடர்ந்து கொடுத்துக்கொண்டேயும் ஓடிக்கொண்டேயும் இருக்க முடியாது.

e. தங்கள் சொந்த ஆவிக்குரிய வலிமையையும் உற்சாகத்தையும் புதுப்பித்துக்கொள்ளும்படியான வழிகளை கண்டறிந்து அன்றாட ஊழியத்திலிருந்து விடுப்பு எடுக்கும் தேவையின்படி நடக்க நான் போதகர்களைக் கேட்டுக்கொள்கிறேன். போதகர்கள் மாநாடுகளிலும் மற்றும் ஸ்தல சபைக்கு நேரடியாக பயனளிக்கும் புத்தாக்க பயிற்சிகளிலும், கலந்துக்கொள்வதற்கு ஸ்தல சபைகள் அனுமதியளிக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

f. நம்முடைய மாணவ போதகர்களுக்காக நாம் தேவனை ஸ்தோத்தரிக்கிறோம். ஊழியத்திற்கு முன்னான பயிற்சிக்கும், ஒரு வருட செயல்முறை ஊழிய விடுப்புக்கு செல்பவர்களுக்கும் ஒரு மூத்த போதகர் வழிகாட்டியாகவும் ஆலோசகராகவும் நியமிக்கப்படுவார். தங்கள் வாராந்திர பிரசங்க திறன்களில் உதவ, அவர்களோடு ஜெபிப்பது மற்றும் ஊழியத்தின் போராட்டத்தில் அவர்களுக்கு உதவவும் இது உறுதுணையாக இருக்கும்.

g. நாம் நம்முடைய ஓய்வுபெற்ற அனைத்து போதகர்களையும் மறக்கக்கூடாது, இவர்கள் நம்முடைய உண்மையான ஊழியக்காரர்கள் தமிழ் வருடாந்திர மாநாட்டின் கீழ் ஓய்வுபெறும் நாள் வரை தேவனுக்கு ஊழியம் செய்தவர்கள். இவர்களோடுகூட பேசுங்கள், இவர்களை உற்சாகப்படுத்துங்கள், தேவைப்படுமாயின் உங்கள் ஸ்தல சபைக்கு இவர்களை வரவேற்று பயன்படுத்துங்கள்.

h. மாநாடாக, இவர்களுக்கு மாதம் RM200 தான் நம்மால் ஓய்வூதியமாக கொடுக்க முடிகிறது, இதை இவர்கள் பெரிதும் பாராட்டுகின்றனர். இவ்வருடத்தில் ஓய்வூதிய நிதிக்கென்று கேட்வே மெதடிஸ்ட் திருச்சபை கிளான ஜெயா தாராளமாக கொடுத்த அன்பளிப்புக்காக எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

i. அடுத்து வரும் நான்காண்டு தவணையில், நாம் ஓய்வூதியத்தை மாதத்திற்கு RM250 ஆக உயர்த்த வேண்டும் என நான் எதிர்ப்பார்க்கிறேன், அதாவது ஒரு போதகருக்கு ஒரு வருடத்திற்கு RM3250 (13வது மாதம் உட்பட). நம்முடைய பெரிய சபைகளில் சில தாராளமான தொகை ஒதுக்கினால் நமக்கு நிலையான வைப்பு வட்டி விகிதம் (FD interest) கிடைக்கப்பெற உதவும், இதன் மூலம் ஓய்வூதிய நிதிக்கு பணம் உட்செலுத்தப்படுவது சாத்தியமாகும். நம்முடைய அன்பான மூத்த போதகர்களுக்கு ஒரு பெரிய ஆசீர்வாதமாக அமையும்.

j. மாறாக, சில சபைகள் இரண்டு அல்லது மூன்று போதகர்களுக்கு ஒரு வருட தொகையை ஏற்றால், (முன் குறிப்பிடப்பட்ட, ஒரு ஓய்வுபெற்ற போதகருக்குரிய தொகை), இது சாத்தியமாகும்.

## 7. நமது குடும்பங்கள்.

a. இந்த காலக்கட்டத்தில், நமது குடும்பங்கள் பிசாசானவனின் பெரும் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றன, கிறிஸ்துவ சந்ததி எதிர்காலத்தில் வளராமல் இருக்க அவன் செயல்படுகிறான். நாம் இந்த நேரடி மற்றும் மறைமுக தாக்குதலை அசட்டை செய்தால், சூழ்நிலையை மீட்டு சரிசெய்ய மிக தாமதமாகிவிடும்.

b. தேவன் நமக்கு கொடுத்த குடும்பங்கள் நமது சபை சமுதாயத்துக்கு அஸ்திபாரம். இங்குதான் பிள்ளைகள் தேவனுடைய வழிகளில் வளர்க்கப்பட வேண்டும். பெரும்பாலான பெற்றோர்கள் தங்களது ஆவிக்குரிய அழைப்பையும் பொறுப்புக்களையும் சபை பள்ளியின் கைகளில் விட்டுவிடுவது மிகவும் கவலைக்குரியதாக இருக்கிறது.

c. பெற்றோர்கள் நேரமெடுத்து தங்கள் பிள்ளைகளிடம் இயேசுவைப் பற்றி பேச வேண்டும் மேலும் அவர்கள் சொந்தமாக ஜெபிக்க கற்றுக்கொடுத்து உதவ வேண்டும். தேவனைப் பற்றி ஆர்வமில்லாத பெற்றோர் அதை தங்களுடைய பிள்ளைகளின் வாழ்வில் அறிவுறுத்த முடியாது.

d. போதகர்களும் உக்கிராணக்குழு தலைவர்களும், நமது பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு வழிகாட்டிகளாவதற்கு உதவும் வகையில் திட்டமிடுவதையும் முயற்சிசெய்வதையும் நான் காண விரும்புகிறேன். இந்த காரியத்தில் மூப்பர் வாரியம் ஸ்தல சபையுடன் இணைந்து சாத்தியமான வழிகளை கண்டறிய நான் ஊக்குவிக்கிறேன்.

e. நமது சபைகளிலுள்ள நமது குடும்பங்களில் இருக்கும் அநேக தனித்திருப்பவர்களையும் நாம் அணுக வேண்டும். அவர்கள் இன்னும் தனித்திருப்பதற்கு அநேக காரணங்கள் இருக்கலாம். அவர்களை நாம் ஓரங்கட்டவோ புறக்கணிக்கவோ முடியாது, ஆனால் அவர்களோடு பயணிக்க அவர்களை புரிந்துக்கொள்ள வழிகளை கண்டறிய வேண்டும்.

f. நெகிழ்பாலுறவாளர்கள் (LGBTQ) இலக்கு, பெற்றோர்களுக்கு இன்னொரு கண்ணியாயிருக்கிறது, இதை சமாளிக்க அவர்கள் தேறினவர்களாயிருப்பது மிக அவசியம். இது பள்ளிகளிலும் சமூக ஊடகங்களிலும் வந்துவிட்டது, இது இயற்கையானது மற்றும் ஏற்புடையது என பிரச்சாரப்படுத்தப்படுகிறது.

## 8. நமது வாரியங்களும் அமைப்புகளும்.

a. ஓவ்வொரு வாரிய தலைவர்களும் அமைப்புகளின் தலைவர்களும் தங்கள் தங்கள் வாரிய மற்றும் அமைப்புகளின் அறிக்கைகளை தெளிவாக சமர்ப்பித்திருக்கிறார்கள்.

b. ஒவ்வொரு வாரிய தலைவர்களுக்கும் அவர்களின் குழு அங்கத்தினர்களுக்கும் அவர்களின் நற்பணிக்காக எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன், அவர்கள் சிறப்பாக செய்து தங்களுடைய பொறுப்புகளை தங்களால் இயன்றவரை நிறைவேற்றியுள்ளனர்.

c. மாகாண மற்றும் தேசிய அளவிலான ஏற்பாட்டுக்குழு தலைவர்களுக்கும் எனது நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நமது ஸ்தல சபை மற்றும் மாகாண சபைகளின் எல்லைக்கு அப்பாற்பட்டு, ஒன்றுகூட முக்கிய வழிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்.

d. புதிய தலைமைத்துவத்தை வளர்க்கும் ஒரு தளமாக நமது அனைத்து அமைப்புகளும் உள்ளன, இது நம்முடைய அனைத்து ஸ்தல சபைகளுக்கும் கூட ஆசீர்வாதமாக அமைந்துள்ளது.

## 9. மலேசியாவிலுள்ள மெதடிஸ்ட் திருச்சபை.

a. அத்தியட்சர் மறைதிரு முனைவர் டி ஜெயக்குமாரின் ஆவிக்குரிய தலைமைத்துவத்துக்காக நான் தேவனுக்கு நன்றி சொல்கிறேன். அவரின் பிரயாணத்தின் எல்லையையும் ஆழத்தையும் கண்டும், இங்கேயும் சபா மற்றும் சரவாக்கில் உள்ள பல்வேறு மன்றங்களுக்கு கொடுக்கும் உள்ளீடுகளை கண்டும் நான் ஆச்சரியத்துக்குள்ளாகிறேன்,

b. தற்போதைய மெதடிஸ்ட் ஒழுங்கு புஸ்தகத்தை இன்னும் செயல்திறன்மிக்கதாகவும் தெளிவானதாகவும் அமைக்க அவர் முயற்சித்துக்கொண்டிருக்கிறார். 2025 ஆரம்பத்தில் புதிய மெதடிஸ்ட் ஒழுங்கு புஸ்தகம் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது, காரணம் அனைத்து வருடாந்திர மாநாடுகளும் பரிந்துரைக்கப்பட்ட சட்டமன்றத்திற்கு தேர்வுசெய்ய நாம் காத்திருக்க வேண்டியதாயிருக்கிறது.

c. சபையாக இத்தேசத்தில் செயல்பட, நமது சட்டபூர்வ நிலையை நிர்ணயிக்கும் நாடாளுமன்ற சட்ட பிரிவு 457 புத்தகமாக இப்பொழுது RM1க்கு கிடைக்கும்.

d. திருமணத்திற்கு முந்ததைய ஆலோசனை ஏடு, திருமண கையேடு, ஆங்கிலத்தில் வெளியாகியுள்ளது. இவைகளை பயன்படுத்துங்கள், கூடுதல் நகல்களை சபை அலுவலகத்தில் கைவசமாக வைத்திருங்கள்.

e. தம்பதியினருக்கான திருமண கையேடு ஒன்றின் விலை RM8.

f. போதகர்கள் மற்றும் ஆலோசகர்களுக்கான திருமண கையேடு ஒன்றின் விலை RM36.

g. தம்பதியினருக்கான திருமண கையேட்டு குறிப்பு ஒன்றின் விலை RM3.

h. மெதடிஸ்ட் அங்கத்துவ கையேடு ஒன்று RM10க்கு கிடைக்கும். மலாய் மொழியில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான கையேடுகள் உள்ளன. உங்கள் புது அங்கத்தினர்களுக்காகவும் புதிய விசுவாசிகளுக்காகவும் இவைகளை வாங்குங்கள்.

i. மெதடிஸ்ட் தொழுகை புத்தகம் இப்பொழுது கிடைக்கும்.

j. முன் கோரிக்கை செய்தவர்கள் 2025கான மெதடிஸ்ட் திட்டமிடல் ஏடு / நாள்காட்டிகள் பெற்றுக்கொள்ளலாம்.

k. மேற் சொல்லப்பட்ட ஏதாவது ஏடுகளை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின், தயவு செய்து நமது அலுவலக நிர்வாகி சகோ ஜேம்ஸ் அவர்களை தொடர்புக்கொள்ளவும், அவர் இவைகளை வாங்க உங்களுக்கு உதவுவார்.

l. நமது மெதடிஸ்ட் அறக்கட்டளை கல்வி உதவிதொகைக்கு உங்கள் வருடாந்திர பங்களிப்பாக ஒரு தொகையை ஒதுக்க நான் அனைத்து ஸ்தல சபைகளையும் கேட்டுக்கொள்கிறேன். தயவாக இதை வருடாந்திர ஒதுக்கீடாக செய்யுங்கள்.

m. இதற்குரிய விளம்பர அறிவிப்பு ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் அல்லது மே மாதங்களில் வெளி வரும். நமது தவமா மாணவர்கள் பலர் தொடர்ந்து இதிலிருந்து பயன்பெறுகிறார்கள், அதற்காக நாம் தேவனை ஸ்தோத்தரிக்கிறோம்.

n. நமது அங்கத்தினர்களில் சிலர் மாநாட்டு அத்தியட்சரிலிருந்து பெயரிடுமுறைமாற்றி மாநாட்டு தலைவர்கள் ஆகியதைப் பற்றி கேட்டனர். அத்தியட்சர் ஜெயா அவர்கள் இதைப்பற்றி மேலும் விளக்குவார், காரணம் இது சமீபத்தில் பொது மாநாட்டு செயற்குழு கூட்ட ஆகஸ்டு அமர்வில் முடிவெடுக்கப்பட்டதில் சம்பந்தப்பட்டுள்ளது.

## 10. தேசிய அளவிலான கவனிப்புகள்.

a. தற்போதைய Mufti Bill மற்றும் சட்டபூர்வமாக்க முயலும் RUU 355 முக்கியமானவைகள், நமது சொந்த அங்கத்தினர்கள் இதன் நிலையை பற்றி அறிந்திருப்பது அவசியம்.

b. இவைகள் நமக்கு சம்பந்தமில்லாதவைகள் என எண்ணி நாம் இருந்துவிடக்கூடாது. இவைகள் தகுந்த தளத்தில் விவாதிக்கப்படுகின்றன என நான் நம்புகிறேன். நாம் கவலைப்படவோ நம்பிக்கை இழக்கவோ அவசியமில்லை ஆனால் நம்முடைய தகுந்த மறுமொழியை நாம் வெளிப்படுத்த வழிகளை கண்டறிய வேண்டும்.

c. கடந்த ஆண்டு நான் குறிப்பிட்டிருந்தது போல, அரசியல் முன்னிலையில், பச்சை அலையை (Green Wave) நாம் சாதாரணமாக எடுத்துக்கொள்ளக்கூடாது. வெளிப்படையான மற்றும் முற்போக்கான அரசியல் தலைவர்கள் என்று நாம் எண்ணியவர்கள், பெரும்பான்மையினரோடு சேர்ந்து வஞ்சித்து தங்கள் சொந்த அரசியல் பிழைப்புக்காக பின்வாங்குகின்றனர் என்று நாம் படிப்படியாக தெரிந்துக்கொண்டோம்.

d. பாலஸ்தீன கொடிகள் வெளியரங்கமாக பறக்கவிடப்பட்டு, இஸ்ரவேலை பகிரங்கமாய் பகைக்கும் செயல் தாகததாக நாம் காணும்போது, இது எங்கு கொண்டுசெல்லும் என்ற கேள்வி நமக்கு எழுகிறது. இது தூரமில்லை, காரணம் பூமிபுத்ரா மற்றும் பூமிபுத்ரா அல்லாதார் பிரச்சனை இப்பொழுது உம்மத் மற்றும் உம்மத் அல்லாதார் என்று மாறிவருகின்றதை நாம் காண்கிறோம்.

e. நம்முடைய பிரதமர், அமைச்சரவை, தலைவர்கள் மற்றும் நமது தேசத்தின் நலனுக்காக ஜெப குழுக்களில் மற்றும் வீட்டு ஜெபங்களில் ஜெபிக்கும்படியாக நான் அனைத்து சபைகளையும் கேட்டுக்கொள்கிறேன். சமாதானமும் மத விடுதலையும் நமது தேசத்தின் முக்கியத்துவமாக இருக்க நாம் தொடர்ந்து ஜெபிப்போம்.

f. ஒவ்வொரு ஆண்டும் என் உரையில் நான் வலியுறுத்துவது போல, உங்கள் பகுதிகளில் உள்ள சட்டமன்ற உறுப்பினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரோடு தொடர்பில் இருக்க முயற்சியெடுங்கள். நாம் அவர்களை சந்திக்க வேண்டும், அவர்களுடன் தொடர்புகொண்டிருக்க வேண்டும், அவர்களுக்காக ஜெபிக்கவும் வேண்டும்.

**11. நன்றியுரை.**

a. அத்தியட்சர் முனைவர் டி ஜெயக்குமார் அவர்களின் நட்புக்காக, வழிகாட்டுதலுக்காக, உதவிக்காக மற்றும் ஜெப ஆதரவுக்காக நான் நன்றி கூறுகிறேன். நமது மாநாட்டு மற்றும் ஸ்தல சபை தேவைகளுக்காக அத்தியட்சரின் ஆதரவுக்காகவும் அன்புக்காகவும் அவரை பாராட்டுகிறேன்.

b. ஊழியத்தில் தியாகத்துடன் பணியாற்றும் நமது அனைத்து போதகர்களுக்கும் ஊழியர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் என் உளமார்ந்த நன்றி. நான் இவர்களுக்காகவும் இவர்கள் குடும்பங்களுக்காகவும் எப்பொழுதும் ஜெபிக்கிறேன்.

c. தவமா வாயிலாக தேவனுக்கு முழுஉள்ளத்தோடும் அர்ப்பணிப்போடும் ஜெபிக்கும் மற்றும் ஊழியம் செய்யும் நம்முடைய அனைத்து சபை மக்கள் தலைவர்களுக்கும் உக்கிராணக்குழு அங்கத்தினர்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

d. அனைத்து வாரிய செயற்குழுவினருக்கும் மற்றும் நிதி வாரிய அங்கத்தினர்களுக்கும், அவர்களின் பங்களிப்பிற்கும் ஆதரவுக்கும் என் நன்றி. நமது நீண்ட கூட்டங்களின்போது ஒற்றுமைக்கும் தோழமைக்கும் நான் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

e. மாநாட்டு மக்கள் தலைவரின் பங்களிப்பிற்கும் மற்றும் அவரது உப தலைவர்களின் உற்சாகத்துக்கும் என் நன்றி.

f. மாநாட்டு செயலாளர் திரு மைக்கல் ராஜா, மாநாட்டு பொருளாளர் திரு பிரான்சஸ் மற்றும் திரைக்கு பின்னால் அயராது பணியாற்றும் நமது நிதி தலைவர் சகோதரர் அகஸ்டஸ் அவர்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

g. நமது அலுவலக பணியாளர்கள்: சகோதரர் ஜேம்ஸ், சகோதரி மெர்சி, சகோதரி ஜெனித்தா மற்றும் எப்பொழுதும் பெரும் உதவியாக இருக்கும் சகோதரர் ஷேக்ஸ்பியர் அவர்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

h. தேவைப்படும்போது எந்த உதவி செய்வதற்கும் எப்பொழுதும் தயாராக இருக்கும் சகோதரர் ஜேசு அவர்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

i. அடிக்கடி எனக்கும் என் குடும்பத்துக்கும் நேரமெடுத்து ஜெபிக்கும் ஜெப குழுவுக்கும் மற்றும் அனைவருக்கும் என் நன்றி.

j. இறுதியாக, என்னை என் ஊழியத்தில் எப்பொழுதும் ஆதரவு கொடுத்து தாங்கின என் மனைவி எலிஸ் மற்றும் என் மூன்று பிள்ளைகளுக்கும் என் நன்றி.

நாம் அவருக்காக செய்யும் அனைத்திலும் தேவனுடைய நாமத்தின் மகிமையை மட்டுமே தேடும்போது, தேவன் எழுப்புதலையும் வளர்ச்சியையும் நமது அனைத்து ஸ்தல சபைகளிலும் கொண்டுவரட்டும். எல்லா மகிமையும், துதியும் மற்றும் கனமும் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவருக்கே.

‘தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன், உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்’.

ஏசாயா 44:3

நன்றி தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

அவரது கிருபையில்,
**மறைதிரு முனைவர் டென்னிஸ் ராஜ்**
தமிழ் வருடாந்திர மாநாடு,
மலேசிய மெதடிஸ்ட் திருச்சபை

**உக்கிராணக்குழு திட்டமிடல் அமர்வுகளுக்கு ஸ்தல சபை சரிபார்பதற்கான பட்டியல்**

1. இந்த ஆண்டு நம் சபை கவனம் செலுத்தப்போகும் குறிப்பிட்ட பகுதிகள் என்ன? இந்த ஊழியங்களுக்காக திட்டமிட, செயலாற்ற மற்றும் ஒதுக்கிட எடுக்கப்படும் படிகளில் சில என்னென்ன?
2. நமது சொந்த ஸ்தல சபையில் வளர்ச்சி குழுக்களை மேம்படுத்த நாம் செய்ய வேண்டியது என்ன? நமது அனைத்து உக்கிராணக்குழு தலைவர்களும் வளர்ச்சிக்குழுவுக்கு தலைமைத்தாங்க தயாரா? இன்னும் என்ன தேவையாயிருக்கிறது
3. நமது சபையிலுள்ள பிள்ளைகளின் ஆவிக்குரிய தேவை சந்திக்கப்படுகிறதா? அவர்களுக்கு கற்றுக்கொடுக்கப்படும் குறிப்பேடுகளை உக்கிராணக்குழு பார்த்துள்ளதா? ஆசிரியர்களுக்கு வேறு ஏதாவது தேவையாயிருக்கிறதா?
4. வாலிபர்களுக்கு செவிகொடுக்க உக்கிராணக்குழு நேரம் கொடுத்துள்ளதா? சில காரியங்கள் கவனிக்கப்பட வேண்டியுள்ளதா? ஸ்தல சபையில் வாலிபர்களுக்கு ஊழியத்தில் வாய்ப்புகள் கொடுக்கப்படுகின்றனவா?
5. நமது ஸ்தல சபையின் சுவிசேஷ ஊழியத்தின் பெலவீனங்கள் என்ன? அது எவ்வாறு கையாளப்படுகிறது? புதிய ஆத்துமாக்களுக்காக ஸ்தல சபை அயராது ஜெபிக்கிறதா?
6. தங்கள் குடும்ப சூழ்நிலையில் அங்கத்தினர்கள் ஊழியங்கொள்ளப்படுகிறார்களா என்பதை சபை எப்படி உறுதிசெய்கிறது? தங்கள் பிள்ளைகளை சீஷத்துவம்செய்ய பெற்றோர்களுக்கு உதவும்படியாக என்ன திட்டங்கள் உள்ளன?
7. நமது ஸ்தல சபை வீடு சந்திப்பு ஆக்ககரமாக உள்ளதா (போதகர்கள் மற்றும் தவைர்கள்)? மேலும் என்ன செய்ய முடியும்?